உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 05.06.2026 • மலர் 04 • இதழ்: 156 • வெள்ளிக்கிழமை • Edition : Nagercoil • 05.06.2026 • Vol : 04 • Issue : 156 • Page : 4 • Rs. 5/-

### டெல்லியில்

# பிரதமர் மோடியை சந்தித்த வெனிசுலா பொறுப்பு அதிபர் டெல்சி

புதுடெல்லி, ஜூன் 5

வெனிசுலாவில் இருந்து இந்தியாவுக்கான கச்சா எண்ணெய் இறக்குமதியை அதிகரிப்பது குறித்து இந்த சந்திப்பில் பேசப்படும் என சொல்லப்படுகிறது. 5 நாட்கள் அரசு முறைப் பயணமாக இந்தியா வந்துள்ள வெனிசுலாவின் பொறுப்பு அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸ், இன்றைய தினம் இந்தியப் பிரதமர் மோடியை டெல்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் சந்தித்துள்ளார். நேற்று தொடங்கிய அதிபர் டெல்சியின் பயணம், ஜூன் 7 வரை 5 நாட்களுக்கு தொடரும் என சொல்லப்பட்டுள்ளது.

இந்த உயர்மட்டக் குழு கூட்டத்திற்காக, வெனிசுலா பொறுப்பு அதிபர் டெல்சி உடன் வெனிசுலாவின் வெளியுறவு, பொருளாதாரம், நிதி, அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் போக்குவரத்து ஆகிய துறைகளின் அமைச்சர்கள் அடங்கிய பெரிய குழு இந்தியாவிற்கு வந்துள்ளது. சர்வதேச அளவில் நிலவும் எரிசக்தி சவால்களுக்கு மத்தியில், இரு நாடுகளுக்கும் இடையிலான மூலோபாய பங்களிப்பை வலுப்படுத்துவது மற்றும் கச்சா எண்ணெய் இறக்குமதியை அதிகரிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

குறிப்பாக வெனிசுலாவில் இருந்து இந்தியாவுக்கான கச்சா எண்ணெய் இறக்குமதியை அதிகரிப்பது, இந்தியப் பொதுத்துறை நிறுவனங்களின் முதலீடுகளை விரிவுபடுத்துவது, இரு நாடுகளுக்கும் இடையேயான பொருளாதார உறவை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லுதல், மருந்துப் பொருட்கள் உற்பத்தி மற்றும் விநியோகத்தில் கூட்டாண்மை போன்றவை குறித்து இந்த 5 நாள் பயணத்தில் பேசப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இத்துடன் வெனிசுலா குழுவினர் தங்களின் பயணத்தின் ஒரு பகுதியாக, இந்தியாவின் தொழில்நுட்ப மற்றும் தொழில்முறைத் திறன்களை அறிவதற்காக இந்தியாவின் எரிசக்தி, மருந்து மற்றும் வாகனத் உற்பத்தி சார்ந்த முக்கியத் தொழிற்கூடங்களுக்கு நேரில் சென்று பார்வையிடத் திட்டமிட்டுள்ளனர்.



### கிருஷ்ணகிரியில்

## மத்திய மாவட்ட தமிழக வெற்றி கழக மாவட்ட அலுவலகம் திறப்பு விழா



கிருஷ்ணகிரி ஜூன் 5

கிருஷ்ணகிரியில் தமிழக வெற்றி கழக தலைவர் தமிழக முதல்வர் ஜோசப் விஜயின் ஆலோசனையின்படி, கழகப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சருமான என்.ஆனந்தின் வழிகாட்டுதலின்படி, மத்திய மாவட்ட தமிழக வெற்றி கழகம் சார்பில் தலைமை அலுவலகம் திறப்பு விழா கிருஷ்ணகிரி டான்சியில் மத்திய மாவட்ட கழக செயலாளர் சுரேஷ் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. முன்னதாக மேற்கு மாவட்ட செயலாளர் வடிவேல், மற்றும் சூளகிரி மது ஹேம்நாத் ஆகியோர் ரிப்பன் வெட்டி அலுவலகத்தை திறந்து வைத்தனர். அதிகாலை யாகங்களுடன் பூஜை நடத்தி பின்னர் ரிப்பன் வெட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த அலுவலக திறப்பு விழா நிகழ்ச்சியில் கூட்டணி கட்சியை சேர்ந்த காங்கிரஸ் மாவட்ட தலைவர் ரகு, விடுதலை சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் தமிழ்மணி, உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலர் கலந்து கொண்டனர். பின்னர் அங்கு கூடியிருந்த அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. விழா நிகழ்ச்சியை மத்திய மாவட்ட மருத்துவர்அணிஅமைப்பாளர் டாக்டர் ஜி.பார்த்திபன் ஒருங்கிணைத்து சிறப்பாக செய்திரு ந்தார். மத்திய மாவட்ட தவெக அலுவலக திறப்பு விழா நிகழ்ச்சியில் கல்வியாளர் வி.வி.மூர்த்தி, தொழிலதிபர் சுரேஷ், மற்றும் த வெக மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளை, சார்பு அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், உள்ளிட்ட கழகத் தோழர்கள் ஏராளமான கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

### நாகர்கோவில் மாநகராட்சி

## பொதுமக்கள் மனுக்களுக்கு உடனடி நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு மேயர் உத்தரவு



நாகர்கோவில், ஜூன். 05

நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறும் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது.

அதன்படி நேற்று (பொ) மேயர் மேரி பிரின்சி லதா தலைமையில், மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா முன்னிலையில் குறை தீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. இம்முகாமில் பொதுமக்களிடம் இருந்து 12 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்களுக்கு தீர்வு காண சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மேயர் பிரின்ஸி லதா உத்தரவிட்டார். இந்த முகாமில் மாநகர் நல அலுவலர் டாக்டர். சரோஜா, மாநகர் துணை பொறியாளர் ரகுராம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## இந்தியா கூட்டணி ஆலோசனை கூட்டத்தில் திமுக பங்கேற்காது தலைமை அறிவிப்பு



சென்னை, ஜூன் 5

திமுக தலைமை கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

டெல்லி "கான்ஸ்டிடியூஷன் கிளப்பில்" வருகின்ற ஜூன் 8ஆம் தேதி நடைபெறும் "இந்தியா" கூட்டணிக் கட்சிகளின் கூட்டத்திற்கு வருமாறு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை நீட் தேர்வு, தொகுதி மறுசீரமைப்பு, அவசர அவசரமாகத் தேர்தல் நேரத்தில் திணிக்கப்பட்ட எஸ்.ஐ.ஆர்., தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகள், ஒரே நாடு ஒரே தேர்தல், வக்பு சட்டம், எப்.சி.ஆர்.ஏ. சட்டத் திருத்தம் உள்ளிட்ட ஜனநாயகத்திற்கும், மதச்சார்பின்மைக்கும், மாநில உரிமைகளுக்கும் எதிரான அனைத்திற்கும் தொடக்கம் முதலே, முதல் அரசியல் இயக்கமாகத் துணிச்சலுடன் எதிர்த்து நின்றது.

அதற்கான நடவடிக்கைகளை ஜனநாயக ரீதியில் நாடாளுமன்றத்திலும், ஆட்சியில் இருந்த நேரத்தில் சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும், உரிய நேரத்தில் நீதிமன்றங்களிலும் எடுத்து வைத்து வாதாடியும், போராடியும் வந்திருக்கிறது.

"இந்தியா" கூட்டணி தொடங்கியதிலிருந்து அக்கூட்டணியின் மையச்சக்தியாக திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கியது. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்தான் நாட்டு மக்களுக்கான முக்கியப் பிரச்சினைகளில் முதன்மைக் குரல் எழுப்பி வந்தார். இது இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளும் அக்கட்சிகளின் தலைவர்களும் நன்கு அறிவார்கள்.

தமிழ்நாட்டில் நடைபெற்ற சட்டமன்றப் பொதுத்தேர்தலுக்குப் பின், காங்கிரஸ் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இழைத்த துரோகத்தினால் மிகுந்த மனக்காயமுற்றிருக்கும் கழகத் தோழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்ற வகையில், வருகின்ற ஜூன் 8ம் தேதி டெல்லியில் நடைபெறும் "இந்தியா" கூட்டணிக் கூட்டத்தில், அதாவது காங்கிரஸ் பங்கேற்கும் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பங்கேற்காது.

இக்கூட்டத்தில் பங்கேற்காத அதேநேரத்தில் இந்தக் கூட்டத்தில்இடம்பெற்றுள்ளமற்றகட்சிகள்முன்வைக்கும் நாட்டு நலனைப் பாதிக்கும் பிரச்சினைகளில், திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் குரல் கொடுக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம். பட்டதாரி. தமிழில் உரையாடுதல். தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701



தருமபுரி மாவட்டத்தில் விடுமுறை முடிந்து தனியார் மற்றும் அரசு பள்ளிகள் நேற்று திறக்கப்பட்டது. இதையடுத்து தருமபுரி அவ்வையார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியின் மாணவிகள் மிகுந்த உற்சாகத்துடன் பள்ளிக்கு வருகை தந்தனர். பள்ளியின் தலைமை ஆசிரியர் சுதா, உதவி தலைமை ஆசிரியர் முருகன் மற்றும் இரு பாலர் ஆசிரியர்கள் மாணவிகளுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து வரவேற்றனர். மேலும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஜோதி சந்திரா கலந்து கொண்டு பள்ளி மாணவிகளுக்கு பாட புத்தகங்கள் வழங்கி 2026 2027 ஆம் ஆண்டுக்கான வகுப்புகளை தொடங்கி வைத்தார்.

## தமிழக பள்ளிகளில் நற்போதனை வகுப்பு தொடங்க வேண்டும்

### முதல்வர் விஜய்க்கு பி.டி..செல்வகுமார் வேண்டுகோள்



சுசீந்திரம், ஜூன் 5

தமிழகத்தில் இன்று பள்ளிகள் திறக்கப்பட்டுள்ள நிலையில், சுசீந்திரம் எஸ்.எம்.எஸ்.எம் பள்ளியில் இந்த கல்வியாண்டில் முதல், இரண்டாம் இடங்களைப் பெற்ற 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் 100 பேருக்கு கலப்பை மக்கள் இயக்க தலைவர் பி. டி.செல்வகுமார் பரிசுகள் வழங்கி பேசியதாவது:

மாணவச் செல்வங்கள் பொக்கிஷமாக பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். இவர்களை நிதானமாக, கவனமாக, அர்ப்பணிப்போடு ஆசிரியர்கள் கையாள வேண்டாம். ஆங்காங்கே பாலியல் அத்துமீறல்கள் நடப்பதை போக்சோ சட்டம் போட்டு தண்டிப்பது, தேவையான ஒன்றாக உள்ளது. அதனால் முதல்வர் விஜய் மாணவச் செல்வங்களை ஒழுக்க பாதைக்கும், வளர்ச்சி பாதைக்கும் கொண்டு செல்ல வாரம் தோறும் பள்ளிகளில் நற்போதனை வகுப்புகளை கற்றறிந்த சான்றோர்களை வைத்து நடத்த வேண்டும். இன்றைக்கு போதை பழக்கம், ஈவ்டீசிங், சினிமா, கிரிக்கெட் மோகம், பைக் ரேஸ் ஆகியவற்றில் இருந்து மாணவர்களை மீட்டு, சமூகத்திற்கு ஆரோக்யமான இளைய சமுதாயத்தை உருவாக்க வேண்டும். கல்விச்சாலை என்பது யாகசாலை. கல்விக்கூடம் என்பது ரோஜா வனம் போன்றது. மாணவச் செல்வங்களை மணம் வீசும் மலர்களாக மாற்றுவது நம் கையில் தான் உள்ளது.

மாணவர்கள் நெஞ்சம் நெருப்பு போன்றது. அந்த நெருப்பை தவறுக்கு அல்லாமல் சமூக வளச்சிக்காக பயன்படுத்த வேண்டும். தமிழக முதல்வர் விஜய் மாற்றத்தை விரும்புபவர். எனவே, மாணவ சமுதாயத்தின் மீது முதல்வர் தனிக்கவனம் செலுத்தி பள்ளிகள் தோறும் நற்போதனை வகுப்புகளை நடத்த ஆணையிடுமாறு வேண்டுகிறேன் என கலப்பை மக்கள் இயக்க தலைவர் பி.டி.செல்வகுமார் வலியுறுத்தி பேசினார். மேலும் இது தொடர்பாக முதல்வருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இந்தவிழாவில்சென்னைஜெயிண்ட் ஷிப்பிங் & லாஜிஸ்டிக்ஸ் இயக்குனர் ஜாண்சன், சுசீந்திரம் எஸ்.எம்.எஸ்.எம் பள்ளி தலைமை ஆசிரியர் கண்ணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# ஆன்லைனில் போதை மாத்திரை வாங்கி கல்லூரி மாணவிகளுக்கு விற்பனை இளம் பெண் உள்பட 8 பேர் கைது



ஈரோடு ஜூன் 5

ஈரோடு நாச்சியப்பா வீதியில் சிலர் போதை மாத்திரை விற்பனை செய்வதாக ஈரோடு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அப்போது போலீசார் விரைந்து சென்று அங்கு சந்தேகப்படும் படி நின்று கொண்டு இருந்த வாலிபர்களிடம் விசாரணை நடத்தினர்.

அப்போது அவர்கள் விற்பனை செய்வதற்காக போதை மாத்திரை வைத்து இருந்தது இருப்பது தெரிய வந்தது.

இதையொட்டி ஈரோட்டை சேர்ந்த இருந்த கௌரிசங்கர், முகமது ஜாமில், தீபக், விக்னேஷ் ஆகிய 4 பேரையும் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து ரூ 2 லட்ச த்து 70 ஆயிரம் மதிப்புள்ள போதைக்கு பயன்படுத்தப்படும் வலி நிவாரணம் மாத்திரைகள் கைப்பற்றப்பட்டது. அதேபோல சித்தோடு செங்குந்தபுரம் பகுதியை சேர்ந்த ஒருவரது வீட்டில் போதை மாத்திரைகளை பதுக்கி வைத்து விற்பனை செய்வதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. உடனேபோலீசார்அங்குசென்றுசோதனை நடத்தினர். அப்போது சுஷ்மிதா (வயது 22),அரவிந்த், கவியரசு ,ரவி ஆகியோர் ஆன்லைன் மூலம் வெவ்வேறு முகவரிகளை கொடுத்து போதை மாத்திரைகளை வாங்கி சித்தோடு பகுதியில் உள்ள கல்லூரி மாணவ மாணவிகளுக்கு அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக வைத்திருந்தது தெரிய வந்தது. இதை யொட்டி இந்த இரு சம்பவங்களிலும் இளம் பெண் உள்பட 8 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

# தேர்வில் முதலிடம் பெற்ற 312 மாணவர்களுக்கு முதல்வன் விருது டிஐஜி சிவகுமார் வழங்கினார்



ஈரோடு ஜூன் 5

உதயம் பிளவர் மில், கீர்த்தனா டிரேடர்ஸ், உதயம் ஸ்டோர்ஸ் மற்றும் கொங்கு கலையரங்கம் கவிதாலயம் கொங்கு வேளாளர் இளைஞர் சங்கம்கவிதாலயம் இசைப்பயிற்சி பள்ளி சார்பாக கொங்கு கலையரங்கில் 312 மாணவ மாணவிகளுக்கு முதல்வன் விருது வழங்கும் விழா நடந்தது.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் 10 மற்றும் பிளஸ் 2 தேர்வில் முதலிடம் பெற்ற 312 மாணவ மாணவிகளுக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

கவிதாலயா ராமலிங்கம் சென்னை ஸ்ரீநிதி அனந்த்ராம் கணேஷ் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

கொங்கு கலையரங்கம் தலைவர் சுப்பிரமணியன், செயலாளர் சந்திரசேகர், பொருளாளர் சதாசிவம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். உதயம் பிளவர் மில் உரிமையாளர் உதயம் செல்வம் சௌந்தர்யன் தலைமை தாங்கினார்கள். இதில் சிறப்பு விருந்தினராக சென்னை ஆவடி காவல் இணை ஆணையர் டாக்டர் சிவகுமார் அவரது துணைவியார் ஸ்ரீவித்யா சிவகுமார் ஆகியோர் முதல்வன் விருதுகளை வழங்கினர்.

விழாவில் எம்.எம்.சி.எச் மருத்துவமனை சீனியர் டாக்டர் சதாசிவம் செங்குந்தர் கல்வி கழகம் தாளாளர் சிவானந்தம் எல்.கே.எம் டாக்டர் நடேசன் காலேஜ் ஆப் பார்மஸி துணைத்தலைவர் எம். தங்கமுத்து அருள் சித்தா மருத்துவமனை அருள் நாகலிங்கம் அம்மன் கலை அறிவியல் கல்லூரி தாளாளர் ஜெயலட்சுமி டாக்டர் ராமமூர்த்தி மற்றும் கணேசன், டாக்டர் சுகுமார் ஜோதிடர் ஓம். உலகநாதன், அசோகன், பரதநாட்டிய கலைஞர் திருநங்கை பொன்னி, வழக்கறிஞர் பாலமுருகன், சீனிவாசன் கவிதா மாரிதாஸ், ஸ்ரீராம் டிரேடர்ஸ், செல்வம், மாரீஸ் வேணுகோபால், நித்திய சாஷ்,அன்பு குமார், ஆருத்ரா கபாலீஸ்வரர் கோவில் அறங்காவலர் ராவணன் பிரகாஷ் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

# வறட்சி பாதித்த விவசாயிகளுக்கு முழு காப்பீடும் கடன் தள்ளுபடியும் வழங்க வேண்டும்

## தமிழ்நாடு அனைத்து விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு வலியுறுத்தல்



கமுதி ஜூன் 5

இராமநாதபுரம் மாவட்டம் கமுதி, முதுகுளத்தூர், கடலாடி உள்ளிட்ட தாலுகா பகுதிகளில் கடந்த 2025ஆம் ஆண்டு நெல் உள்ளிட்ட பல்வேறு பயிர்கள் நன்கு வளர்ந்து கதிர்விடும் தருவாயில் மழை இல்லாத காரணத்தால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதன் விளைவாக ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் பயிர்கள் கருகி, விவசாயிகள் பெரும் பொருளாதார இழப்பை சந்தித்தனர்.

பாதிக்கப்பட்டவிவசாயிகளுக்குவறட்சி நிவாரணம், முழுமையான பயிர் காப்பீட்டுத் தொகை மற்றும் விவசாயக் கடன் தள்ளுபடி வழங்கக் கோரி கமுதி, சாயல்குடி, கடலாடி உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் சார்பில் பல்வேறு கண்டன ஆர்ப்பாட்டங்களும் கோரிக்கை முழக்கங்களும் நடத்தப்பட்டன. ஆனால் அப்போதைய அரசு விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கவில்லை என குறிபிட்டார்.

ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர் விவசாயக் கடன் தள்ளுபடியும், பயிர் காப்பீட்டுத் தொகையும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் இருந்த நிலையில், தமிழக அரசு தற்போது அறிவித்துள்ள கடன் தள்ளுபடி திட்டம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளதாக தமிழ் நாடுஅனைத்துவிவசாயிகளின் ஒருங்கிணைப்பு குழுவின் இராமநாதபுரம் மாவட்ட செயலாளர் தரைக்குடி முத்துராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

எனவே, தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி அனைத்து விவசாயிகளுக்கும் முழுமையான விவசாயக் கடன்தள்ளுபடியை தமிழக அரசு உடனடியாக அமல்படுத்த வேண்டும். மேலும், புதிதாக பொறுப்பேற்றுள்ள மாவட்ட ஆட்சியர், காப்பீட்டு நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைநடத்திபாதிக்கப்பட்டஅனைத்து பகுதிகளுக்கும் 100 சதவீத பயிர் காப்பீட்டுத் தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

உடனடியாக காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டால்தான் விவசாயிகள் நம்பிக்கையுடன் இந்த ஆண்டு பருவமழையை முன்னிட்டு மீண்டும் விவசாயப் பணிகளைத் தொடங்க முடியும். மகாராஷ்டிரா அரசு செயல்படுத்தியுள்ள கடன் தள்ளுபடி திட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு தமிழக அரசும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மாவட்ட நிர்வாகம் முழுமையான காப்பீட்டுத் தொகையை பெற்றுத் தர வேண்டும் என்றும் விவசாயிகள் சார்பில் அவர் கேட்டுக்கொண்டார்.

# எல்ஜிடி குளோபல் ஹாஸ்பிடாலிட்டியின் மார்ச் 2026இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான அறிக்கை




சென்னை, ஜூன் 5

எல்ஜிடி குளோபல் ஹாஸ்பிடாலிட்டி நிறுவனம் மார்ச் 2026இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான தனது நிதி முடிவுகளை அறிவித்துள்ளது.

நிறுவனத்தின் செயல்பாடு மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம் குறித்துக் கருத்துத் தெரிவித்த எல்ஜிடி குளோபல் ஹாஸ்பிடாலிட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் வில்ஃபிரட் செல்வராஜ் கூறியதாவது: விரிவடைந்து வரும் பயணத் தேவை, வணிக ஒருங்கிணைப்புகள், கார்ப்பரேட் மற்றும் ஓய்வு நேரப் பயணப் பிரிவுகளில் அதிகரித்து வரும் ஈர்ப்பு ஆகியவற்றின் ஆதரவுடன், வணிக வளர்ச்சி வேகம் இருக்கிறது. தனது நீண்ட கால வளர்ச்சித் திட்டத்தின்ஒருபகுதியாக, எல்ஜிடி குளோபல் ஹாஸ்பிடாலிட்டி நிறுவனம் அகில இந்திய விரிவாக்கம் மற்றும் வளர்ந்து வரும் பயண மையங்களில் அதிக கவனம் செலுத்தி, முக்கிய பிராந்திய சந்தைகளில் தனது செயல்பாட்டை விரிவுபடுத்தி வருகிறது. மேலும், முக்கிய பெருநகர சந்தைகள் மற்றும் அதிக வளர்ச்சி கொண்ட இரண்டாம் நிலை நகரங்களில் நிறுவனம் தீவிரமாக விரிவடைந்து வருகிறது. கூடுதலாக, வெளிநாட்டுப் பயணச் சலுகைகள், பிராந்திய கூட்டாண்மைகள் மற்றும் உலகளாவிய வாடிக்கையாளர் ஈடுபாட்டுத்திறன்களைவலுப்படுத்தும் நோக்கில், துபாய் மற்றும் மலேசியாவில் கவனம் செலுத்தி நிறுவனம் தனது சர்வதேசத் தடத்தை விரிவுபடுத்தி வருகிறது. மேலும் உள்நாட்டு சுற்றுலா, வெளிநாட்டுப் பயணம், பெருநிறுவனப் பயண மேலாண்மை, வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் விருந்தோம்பல் தீர்வுகள் ஆகியவற்றில் தனது நிலையைத் தொடர்ந்து வலுப்படுத்தி வருகிறது என்றார்.

# தமிழக வெற்றி கழகத்தில் இருந்து விலகி 25க்கும் மேற்பட்டோர் அ.தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர்



திருப்பூர்: ஜூன் 05

திருப்பூரில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் புறநகர் மாவட்ட கழகத்திற்குட்பட்ட முத்தனம் பாளையம் மற்றும் வீரபாண்டி பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் புறநகர் மாவட்ட செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசாமி தலைமையில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் தமிழாக வெற்றிகழகத்தில் இருந்து விலகி 25க்கும் மேற்பட்டோர் நிர்வாகி அய்யனார் தலைமையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர் தமிழக வெற்றி கழகத்திலிருந்து விலகி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டவர்களுக்கு புறநகர் மாவட்ட செயலாளர் சிவசாமி மற்றும் கழக நிர்வாகிகள் பொன்னாடை அணிவித்து வரவேற்பு கொடுத்தனர் அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய சிவசாமி தமிழக முதல்வர் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு திருச்சியில் நடைபெற்ற நன்றி அறிவிப்பு கூட்டத்தில் பாரம்பரியமிக்க அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை மிகவும் கொச்சையான வார்த்தைகளால் பேசியதை வன்மையாக கண்டிப்பதாகவும் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்க கூடிய ஆட்சி என்பது மூன்று கால் மட்டுமே தமிழக வெற்றிகழ்த்தத்தின் கால்களாக உள்ளது என்றும் மற்றொரு கால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் காலாக உள்ளது என்றும் நாங்கள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்க கூடிய ஆட்சியை ஒட்டுக்கால் ஆட்சி என்றும் மூன்று கால் ஆட்சி என்றும் விமர்சனம் செய்தால் ஏற்றுக்கொள்வார்களா பாரம்பரியமிக்க கட்சியை தவறுதலாக பேசுவது கண்டனத்துக்குரியது என்றும் கடந்த அண்ணா திராவிட முன்னேற்ற கழக ஆட்சியின் போது முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அம்மையார் கொடநாட்டில் இருக்கும் பொழுது மண்டியிட்டது விஜய் என்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்களை கொள்ளை புறத்தில் அழைத்துக் கொண்டு பேசும்பொழுது தீர்ந்து போன சக்தி என்பது தெரியவில்லையா என்றும் சட்டமன்றத்தில் உடனுக்குடன் எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு இதே விஜய் பதிலளிப்பாரா என்றும் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கேட்ட கேள்விகளுக்கு சட்டமன்றத்தில் பதிலளிக்காமல் வீட்டிற்கு சென்று பதில் கூறியவர் விஜய் என்றும் திருச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் திரைப்பட சூட்டிங் இல் நடிப்பது போன்று நடந்து கொண்டார் விஜய் என்றும் தமிழக முதல்வராக நடந்து கொள்ளவில்லை என்றும் இதில் வரக்கூடிய உள்ளாட்சித் தேர்தல்களில் அனைத்து விதமான தேர்தல்களிலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறும் என்றும் திமுகவின் ஒட்டுக்காலில் உட்கார்ந்து இருக்கக்கூடிய ஆட்சி கூடிய விரைவில் அகற்றப்படும் என்றும் கூறினார் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் வீரபாண்டி கிழக்கு பகுதி செயலாளர் ராம் பிரபு. முத்துணம்பாளையம் பகுதி செயலாளர் மோகன்ராஜ் மாநில இலக்கிய அணி இணை செயலாளர் பண்ணையார் பழனிச்சாமி மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக நிர்வாகிகள் அதிமுக தொண்டர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்....

# மதுபானம் கொடுத்து 14 வயது சிறுமி பலாத்காரம்



திருச்சி, ஜூன் 5

திருச்சி கீழதாராநல்லூர் காமராஜர் நகர் பகுதியை சேர்ந்த 14 வயதுச் சிறுமி, தனது அண்ணனை ( அண்ணன் ஒரு திருநங்கை ) பார்க்கச் சென்றபோது தனியே அழைத்துச் சென்று, குளிர் பானத்தில் மது ஊற்றிக் கொடுத்துப் பாலியல் தொல்லை அளித்ததாக ஓட்டுநர் ஒருவர் மீது புகார் எழுந்துள்ளது. மதுபோதையில் சிறுமி சுயநினைவின்றி கிடந்ததைக் கண்டு ஆத்திரமடைந்த பொதுமக்கள், அந்த ஓட்டுநரைப் பிடித்துத் தர்மஅடி கொடுத்தனர். இச்சம்பவம் குறித்துச் சிறுமியின் உறவினர்கள் மற்றும் அக்கம் பக்கத்தினரிடம் காவல் துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருச்சி கலெக்டர் அலுவலகதிற்கு மீண்டும் வெடிகுண்டு மிரட்டல்




திருச்சி, ஜூன் 5

திருச்சி மாவட்ட ஆட்சியரகத்திற்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை அன்று மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து செவ்வாய்க்கிழமைஅன்றும்மீண்டும்வெடிகுண்டு மிரட்டல்வந்ததால், வெடிகுண்டு தடுப்பு அதிகாரிகள் மாவட்ட ஆட்சியரகத்தில் முழுமையான சோதனை நடத்தினர். சோதனையின் முடிவில், வெடிகுண்டு மிரட்டல் ஒரு வதந்தி என்பது தெரியவந்தது.

# திருச்சி: பேரனுடன் பாட்டி பலி; லாரி மோதி பரிதாபம்

திருச்சி, ஜூன் 5

திருச்சி வயலூர் பகுதியைச் சேர்ந்த நர்கீஸ், தனது மூன்றரைவயது பேரன்சயனை இருசக்கர வாகனத்தில் அழைத்துச் சென்றபோது, காவிரி பாலம் அருகே பின்னால் வந்த லாரி மோதியதில் இருவரும் தடுமாறி கீழே விழுந்தனர். லாரி சக்கரம் ஏறி இருவரும் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். போலீசார் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அரசு மாதிரி பள்ளி மாணவிகளின் சாதனை: ஆசிரியர்கள் பாராட்டு மற்றும் பரிசு வழங்கல்!



தேனி, ஜுன் 5

தேனி மாவட்டம், சில்வார்பட்டி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் அண்மையில்நடைபெற்றதேர்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பிடித்து சாதனை படைத்த மாணவிகளுக்கு, பள்ளியின் உதவித் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து சிறப்புப் பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கிப் பாராட்டினர். இப்பள்ளியில் பயிலும் மாணவிகளில்: முதல் பரிசு – மாணவி ஜீவதர்ஷினி இரண்டாம் பரிசு – மாணவி பரணி மூன்றாம் பரிசு – மாணவி தாட்சாயினி ஆகியோர் பெற்று சாதனை படைத்துள்ளனர். இதில் மூன்றாம் இடம் பிடித்த மாணவி தாட்சாயினி, 'நியூஸ் 7 தமிழ்' தொலைக்காட்சியின் தேனி மாவட்ட ஒளிப்பதிவாளரின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது. மாணவிகளின் உறுதிமொழி வெற்றி பெற்ற மாணவிகளுக்கு ஆசிரியர்கள் நேரில் பரிசு வழங்கி ஊக்கப்படுத்தியது, பள்ளியின் மற்ற மாணவ மாணவிகளுக்கும் ஒரு சிறந்த முன்மாதிரியாகவும், உத்வேகமாகவும் அமைந்தது. பரிசுகளைப் பெற்றுக் கொண்ட மூன்று மாணவிகளும், "இனிவரும் காலங்களில் இன்னும் தீவிரமாகப் படித்து, மாநில அளவில் முதலிடம் பிடித்து பள்ளிக்கும், மாவட்டத்திற்கும் பெருமை சேர்ப்போம்" என்று ஆசிரியர்களிடம் நெகிழ்ச்சியுடன் உறுதி கூறினர். பள்ளியின் சிறப்பம்சம்: சில்வார்பட்டி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியானது, கல்வி மட்டுமின்றி தேனி மாவட்டத்தில் நடைபெற்ற ஏராளமான பல்வேறு போட்டிகளிலும் பங்கேற்று, பல்வேறு சிறப்புப் பரிசுகளையும் பாராட்டுகளையும் தொடர்ந்து பெற்று சாதனைப் பட்டியலை நீட்டித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## தருமபுரி மாவட்ட தமிழ்நாடு பத்திரிகையாளர்கள் சங்கம் சார்பில்

# செய்திமக்கள் தொடர்பு அலுவலரிடம் பத்திரிகையாளர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி மனு



தருமபுரி ஜூன் 05

தருமபுரி மாவட்ட தமிழ் நாடு பத்திரிகையாளர் சங்கம் சார்பில் மாவட்ட தலைவர் சுரேஷ் தலைமையில் மாவட்ட செயலாளர் ராஜ்குமார், மாவட்ட பொருளாளர் புகழேந்தி மற்றும் செய்தி தொடர்பாளர் ராமதாஸ் ஆகியோர் முன்னிலையில் துணைத் தலைவர் ரவிச்சந்திரன், நந்தகுமார், இணைச் செயலாளர் சிங்காரவேலு, துணைச் செயலாளர் அருண்குமார், செயற்குழு உறுப்பினர்கள் பாலு , ஜெயம் சுரேஷ், பெரியசாமி , சங்க உறுப்பினர்கள் இளம்பரிதி , ஸ்ரீனிவாசன், வெங்கடேஷ் மற்றும் சங்க உறுப்பினர்கள் அனைவரும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன் அவர்களை மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து பொன்னாடை அணிவித்தனர்.

அதனை தொடர்ந்து பத்திரிகையாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான, பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காலி வீட்டுமனையில் மத்திய அல்லது மாநில அரசின் வீடு கட்டும் திட்டத்தின் மூலம் வீடு கட்டிதருதல், வீட்டுமனைப் பட்டா வழங்காமல் விடுபட்ட, மாவட்ட மற்றும் தாலுக்காவில் பணிபுரியும், பத்திரிகையாளர்களுக்கும் வீட்டுமனை பட்டா வழங்குதல். நலவாரிய அட்டை வழங்காமல் விடுபட்ட

மாவட்ட மற்றும் தாலுக்காவில் பணிபுரியும் பத்திரிக்கையாளர்களுக்கும் நலவாரிய அட்டை வழங்குதல். மறைந்த கலைஞர் தொலைக்காட்சியின் மாவட்ட செய்தியாளர் வேணுகோபால் அவர்களின் திருவுருவப் படத்தினை பத்திரிகையாளர் அலுவலகத்தில் திறந்துவைத்து, மலர்தூவி மரியாதை செலுத்துதல். மாவட்டத்தில் மற்றும் தாலுக்காவில், பத்திரிக்கையாளர் என்ற பெயரில் பொய்யான செய்திகளை பரப்பி, பத்திரிக்கையாளர்களின் பெயருக்கு அவதூறு பரப்பி உலாவரும் போலி பத்திரிகையாளர்களை கண்டறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம். விடுபட்ட தகுதியுள்ள பத்திரிக்கையாளர்களுக்கு அரசு பேருந்து அடையாள அட்டை வழங்குதல், பத்திரிகையாளர்களுக்கு இரண்டு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கான அரசு ஸ்டிக்கர் வழங்குதல், பத்திரிக்கையாளர்களை பெரிய நிறுவனம் ,சிறிய நிறுவனம் என்றும் தாலுகா மற்றும் மாவட்ட செய்தியாளர் என்றும் பாகுபாடு இன்றி அனைவருக்கும் உரிய மதிப்பினை வழங்குதல், அங்கீகாரம் பெற்ற பத்திரிகையாளர்களின் கார்கள் மாவட்டத்திற்கு உட்பட்ட சுங்க சாவடியில் இலவசமாக சென்று வர அனுமதி பெற்று தருதல் உள்ளிட்ட கோரிக்கை மனுவை வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் தருமபுரி மாவட்ட தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்க நிர்வாகிகள், செய்தியாளர்கள் கலந்து கொண்டனர்.

## கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளதை முன்னிட்டு

# மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகளை வழங்கி முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் குறித்து கலெக்டர் ஆய்வு




தேனி, ஜூன் 5

கோடை விடுமுறை முடிந்து இன்று (04.06.2026) பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளதை முன்னிட்டு, தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், இலட்சுமிபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, இலட்சுமிபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன், வழங்கினார்.

தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, தமிழ்நாட்டில் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளது. இலட்சுமிபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட காலை உணவின் தரம் மற்றும் மாணவர்களுக்கு போதுமான அளவில் உணவுவழங்கப்படுகிறதாஎன்பனகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும், உணவு தயாரிக்கும் சமையலறை, குடிநீர் வசதி, உணவுப் பொருட்களின் இருப்பு போன்றவற்றை பார்வையிட்டார். தொடர்ந்து, பெரியகுளம் வட்டத்திற்குட்பட்ட இலட்சுமிபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 8ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடைகளை வழங்கி கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்று மாணவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தார். மேலும், பள்ளி வளாகம், வகுப்பறைகள் மற்றும் கழிவறை வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளையும் ஆய்வு செய்து தூய்மையாக பராமரிக்கப் பட வேண்டும் என்றும், மாணவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.



தூத்துக்குடி மாவட்டத்தில் கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாணவமாணவிகள் மிகுந்த உற்சாகத்துடன் காலை தங்களது பள்ளிகளுக்குச் சென்றனர். தூத்துக்குடி மாவட்டம், வல்லநாடு வி.றி.வி.டி அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழக குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பெ.மதன்ராஜா 2026-2027 ஆம் கல்வியாண்டின் தொடக்கமாக பயிலும் மாணவ,மாணவியர்களுக்கு இனிப்புகள் மற்றும் ரோஜா பூக்கள் கொடுத்து வரவேற்றார். மேலும், மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்களை மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் தலைமையில் அமைச்சர் பெ.மதன்ராஜா வழங்கினார்.

# பிரிட்டானியா மில்க் பிக்கிஸ் திருக்குறள் சேலஞ்ச் தமிழறிஞர்களின் கலந்துரையாடல் நிகழ்ச்சி




சென்னை,ஜூன் 05,

பல தலைமுறைகளாக, பிரிட்டானியா மில்க் பிக்கிஸ் தமிழ்நாட்டில் குழந்தைகள் வளர்ச்சியில் ஒரு பகுதியாக மாநிலத்தின் மொழி, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தினை கொண்டாடி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக சென்னை வள்ளுவர் கோட்டத்தில் பிரிட்டானியா மில்க் பிக்கிஸ் திருக்குறள் சேலஞ்சை என்ற நிகழ்ச்சியினை அறிமுகப்படுத்தி யுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற தமிழகத்தின் சிறந்த அறிஞர்கள், கலைஞர்கள் மற்றும் கலாச்சார ஆர்வலர்கள் திருக்குறள் குறித்த அர்த்தமுள்ள கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

குறிப்பாக, காலம் காலமாக திருக்குறள் எப்படி நமது வாழ்விற்கு ஏற்ற சிந்தனைகளை தொடர்ந்து பொருத்தமாக வழங்கி வருகிறது, மற்றும் இன்று இளைய தலைமுறையினர்எவ்வாறு அதன்கருத்துக்களை எடுத்துக் கொண்டு பயன்படுத்துகிறார்கள் என்பது குறித்து விவாதித்தனர். மேலும், இளைய தலைமுறையினர் திருக்குறள் கற்றுக்கொள்ளும் முறையை ஏன் புதுமையாகவும் அதிக ஈடுபாடு மிக்க வழியிலும் மாற்ற வேண்டும் என்பது பற்றியும் பேசினர்.

இந்த கலந்துரையாடலில் டாக்டர் ஜி.ஞானசம்பந்தன், விடியன் நாதஸ்வரம், சுகி சிவம் மற்றும் பாரதி பாஸ்கர் ஆகியோர் கலந்து கொண்டனர். டேலண்டட் நிறுவனத்தால் கருத்தாக்கம் செய்யப்பட்ட இந்த புதிய முன்முயற்சியில், இப்போது பிரிட்டானியா மில்க் பிக்கிஸ் பேக்குகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிஸ்கட்டுகளில் திருக்குறளின் சொற்கள் பொறிக்கப்பட்டிருக்கும். அதாவது வெவ்வேறு சொற்கள் பேக்குகளில் உள்ள பிஸ்கட்டில் காணப்படும். மில்க் பிக்கிஸ் பிஸ்கட்களில் உள்ள சொற்களை ஒருங்கிணைத்து வரிசையாக அடுக்கும் போது மூன்று குறள்களை முழுமையாக உருவாக்கலாம்; அவை நட்பு, கற்றல், விடாமுயற்சி போன்ற கருப்பொருள்களை மையமாகக் கொண்டிருக்கும். இது வெறும் பிஸ்கட் பேக் மட்டுமல்ல; ஒரு பிரத்யேக மைக்ரோசைட் மூலம் நுகர்வோர்அவர்கள்கண்டுபிடிக்கும்திருக்குறள் சொற்களை சேகரிக்கவும், அதை ஒன்றாக்கி திருக்குறளை நிறைவு செய்யவும், அதன் மூலம் பரிசுகளை வெல்லவும் முடியும்.

# படந்தாலுமூட்டில் பழமையான பள்ளி முன்னறிவிப்பின்றி திடீர் மூடல்; மாணவர்கள் பெற்றோர்கள் தவிப்பு

மார்த்தாண்டம், ஜூன். 5

களியக்காவிளை அருகே படந்தாலுமூட்டில் அரசு உதவி பெறும் தனியார் மேல்நிலை பள்ளி கடந்த 75 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இந்தப் பள்ளியில் தமிழ் மற்றும் மலையாள மொழி பேசும் மாணவர்கள் பயின்று வந்தனர். தற்போது இந்த பள்ளியில் நிர்வாக பிரச்சனைகாரணமாக வழக்கு நடந்து வருகிறது.

இதனால் பள்ளியில் மாணவர் சேர்க்கை குறைந்தது. தற்பொழுது இந்த பள்ளியில் 13 ஆசிரியர்கள் பணியாற்றி வந்தனர். மாணவர்கள் எண்ணிக்கை குறைந்ததை தொடர்ந்து இந்த பள்ளியில் பணியாற்றும் 13 ஆசிரியர்களும் மற்ற பள்ளிகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

ஆனால் இந்த விஷயம் தெரியாமல் இந்த பள்ளியில் பயின்ற மாணவர்கள் நேற்று பள்ளி திறப்பதை எதிர்பார்த்து காத்திருந்தனர். ஆனால் திடீரென்று நேற்று மாணவர்களுக்கு பள்ளி தரப்பில் தங்களுடைய மாற்றுச் சான்றிதழை வாங்கிச் செல்லும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது இதனால் மாணவர்களும் பெற்றோர்களும் அதிர்ச்சி அடைந்தனர்.

இந்த மாணவர்களும் பெற்றோர்களும் பள்ளிக்கு சென்று என்ன செய்வது என்று கேள்வி கேட்ட பொழுது பள்ளி தரப்பில் டிசியை வாங்கிக் கொண்டு மாற்று பள்ளிகளுக்கு செல்லுங்கள் என இறுதி நேரத்தில் தெரிவித்தனர். இதனால் மாணவர்களும் பெற்றோர்களும் மிகுந்த கலக்கத்துடன் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றனர் .

மேலும் பல மாணவர்கள் மலையாள மொழி பயின்று வருகின்றனர். கன்னியாகுமாரி மாவட்டத்தில் தற்போது மலையாள மொழி பயிலும் பள்ளிகளின் எண்ணிக்கை மிக குறைவாக உள்ளது.

இந்நிலையில் பல வருடங்களாக படித்த பள்ளியில் திடீரென மாற்றுச் சான்றிதழ் பெற்று வேறு பள்ளிகளுக்கு செல்ல வேண்டுமென அறிவுறுத்தியதால் மாணவர்களும் மிகுந்த மன குழப்பத்திற்கு உள்ளாகி உள்ளனர் .

பள்ளி கல்வித்துறையின் இந்த செயல்பாடு மாணவர்களையும் பெற்றோரையும் அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. எனவே, இது போன்று கல்வி பயிலும் மாணவர்களிடம் பொறுப்பெற்ற முறையில் கல்வித்துறை செயல்படாமல் தற்போது பள்ளிகள் திறந்துள்ள நிலையில் திடீர் என தங்கள் படித்து வரும் பள்ளி மூடப்பட்டதாக வந்த உத்தரவால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மாற்றுப் பள்ளியில் சேர்க்க கூடிய நடவடிக்கை எடுக்க கல்வித்துறை அதிகாரிகள் முன் வர வேண்டும் என இந்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




## சில்லறை வியாபாரத்திற்கு கட்டுமான பொருட்கள் விநியோகம் செய்ய அனுமதி கோரி

# தளவாய்சுந்தரம் எம்.எல்.ஏ., தலைமையில் வியாபாரிகள் எஸ்.பி. அலுவலகத்தில் மனு!

நாகர்கோவில், ஜூன்.5

நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டுமான பொருட்கள் விநியோகம்

கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி எம்எல்ஏ தளவாய் சுந்தரம் தலைமையில் கட்டுமான பொருட்கள் சில்லறை வியாபாரிகள் சார்பில் மாவட்ட எஸ்பியிடம் கொடுக்கப்பட்டுள்ள மனுவில் கூறிருப்பதாவது:

நாங்கள் நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டுமான பொருட்கள் விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறோம். (சிமெண்ட், TMT கம்பி, M சாண்ட், ஜல்லி, செங்கல்) நாளது தேதி வரை கனரக வாகனம் (Tempo, Tarus Tipper) செல்லும்பாதைவசதி உள்ளஅனைத்து இடங்களுக்கும் கல்குவாரி மற்றும் கிரஷர் தயாரிக்கும் இடங்களில் இருந்து உரிய அனுமதியோடு (pass) நேரடியாக எங்கள் வாகனங்கள் மூலம் கட்டுமான நடைபெறும் இடத்திற்கு நேரடியாக விநியோகம் செய்கின்றோம்.

இந்நிலையில் அதிகப்படியான கட்டுமானங்கள் நடைபெறும் இடங்கள் மிகவும் குறுகலான சாலை பகுதிகளில் அமைந்துள்ளது. இந்த சாலைகளில் எங்களது சிறிய வாகனங்கள் (TATA ACE/LOAD AUTO) பயன்படுத்தி வருகிறோம். மேலும் சிறிய அளவில் புனரமைக்கப்பட வேண்டிய பணிகளுக்காக கட்டுமானப் பொருட்களின் தேவை மிகச் சிறிய அளவில் தேவைப்படுவதால் ஒரே வாகனங்களில் செங்கல், சிமெண்ட், ஜல்லி, எம் சாண்ட் கொண்டு அளவுகளில் ஆகியவற்றை அனுமதிக்கப்பட்ட கட்டுமானதாரர்களின் தேவைகளை பூர்த்தி செய்கிறோம்.

இந்தப் பணிகளுக்காக கட்டுமான பொருட்களை ஏற்றி இறக்குதல் மற்றும் வாகன ஓட்டுனர்கள் பலருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. மற்றும் நடுத்தர மற்றும் அடித்தட்டு மக்கள் தங்களிடம் இருக்கும் பொருளாதாரத்திற்கு ஏற்றவாறு சிறிய அளவு கட்டுமானப் பொருட்களை வாங்கி தங்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்கிறார்கள்.

எனவே, அனைத்து தரப்பினர் நலன் களையும் கருத்தில் கொண்டு சிறிய ரக வாகனங்களில் கட்டுமானப் பொருட்கள் கொண்டு செல்ல அனுமதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# முதல்வர் விஜயின் தலைமையில் தமிழகம் சரியான திசையில் பயணிக்கிறது கூட்டணி கட்சிகளை அரவணைக்கும் அரசை வரவேற்கிறோம்

## அமைச்சர் ஏ.எம். ஷாஜகான் தென்காசியில் பேட்டி




தென்காசி, ஜுன்5

தென்காசி மாவட்டத்தில் பல்வேறு கட்சி நிகழ்ச்சிகள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள்வழங்கும்விழாக்களில் பங்கேற்பதற்காக வருகை தந்த சிறுபான்மையினர்நலத்துறை அமைச்சர் ஏ.எம். ஷாஜகான் தென்காசி நகர பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்தபோது

அவர் தெரிவித்தாவது

தமிழகத்தில் மக்கள் விரும்பிய மாற்றத்தின் அடிப்படையில் தற்போதைய அரசு சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும், நல்லிணக்கம், சட்டம்ஒழுங்கு, பெண்கள் நலம் மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகள் ஆகியவற்றை பாதுகாக்கும் நோக்கத்துடன் முதலமைச்சர் விஜய் தலைமையிலான அரசு சரியான திசையில் பயணித்து வருவதாகவும் கூறினார்.

வரும் ஜூன் 5ஆம் தேதி தலைமைச் செயலகத்தில் முதல் அமைச்சரவை கூட்டம் நடைபெற உள்ளதாகவும், அதில் சட்டமன்ற கூட்டத்தொடர், பட்ஜெட் கூட்டத்தொடர் மற்றும் மக்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட உள்ளதாகவும் மேலும் வரவிருக்கும் பட்ஜெட்டில் மக்கள் எதிர்பார்க்கும் பல்வேறு நலத்திட்ட அறிவிப்புகள் இடம்பெறும் என்ற நம்பிக்கையையும் வெளிப்படுத்தினார். தமிழக வெற்றி கழக கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு மாநிலங்களவை உறுப்பினர் பதவி ஒதுக்கப்பட்டிருப்பதை வரவேற்றவர் கூட்டணி கட்சிகளுக்கு மரியாதை அளிக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது என்றும் அதற்காக முதலமைச்சருக்கு கூட்டணி சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினார்.

தேர்தல் பிரச்சார காலத்திலேயே அனைத்து கட்சிகளும் பங்கேற்கும் கூட்டணி ஆட்சி அமையும் என முதலமைச்சர் உறுதியளித்திருந்தார் என்றும் அதனை செயல்படுத்தும் வகையில் அமைச்சரவையிலும் தற்போது மாநிலங்களவையிலும் கூட்டணி கட்சிகளுக்கு உரிய இடம் வழங்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க நடவடிக்கை என்றும் குறிப்பிட்டார்.

ஹஜ் பெருநாளை முன்னிட்டு நடைபெறும் குர்பானி தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து கேள்வி எழுப்பப்பட்ட போது குர்பானி வழங்குவதில் எந்த விதமான தவறும் நடைபெறவில்லை என்று அமைச்சர் விளக்கம் அளித்தார்.

இடைத்தேர்தலில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் போட்டியிடுமா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர் வரும் 20ஆம் தேதி சென்னையில் மாநில பொதுக்குழு கூட்டம் நடைபெற உள்ளதாகவும் அதில் பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைமை நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னரே முடிவு அறிவிக்கப்படும் என்றும் தற்போது வரை எந்த ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். மேலும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி கடந்த 75 ஆண்டுகளாக பல்வேறு அரசியல் கட்சியின் கூட்டணிகளில் பங்கேற்ற வரலாறு கொண்ட கட்சி என்றும் தற்போதைய அரசின் செயல்பாடுகளில் ஊழலற்ற நிர்வாகம் பெண்கள் உரிமை பாதுகாப்பு மற்றும் சிறுபான்மையினரின் நலன் ஆகியவற்றில் முதலமைச்சர் உறுதியான நிலைப்பாட்டை வெளிப் படுத்தியிருப்பதாகவும் கூறினார்.

தமிழகத்தில் சட்டம்ஒழுங்கு குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர் புதிய அரசு பொறுப்பேற்று 20 நாட்களே ஆகியுள்ள நிலையில் காவல்துறையில் முக்கிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் குற்றப் பின்னணி கொண்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும்வரும் நாட்களில் சட்டம் தனது கடமையை இன்னும் சிறப்பாக செய்யும் என்றும் தெரிவித்தார். இந்தநிகழ்வில்கூட்டணிகட்சிநிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்...

# ஆரம்ப கல்வி தான் ஒவ்வொரு குழந்தைகளின் எதிர்காலத்தை தீர்மானிக்கிறது; மாணவர்கள் மத்தியில் கலெக்டர் மு.பிரதாப் பேச்சு



நாகர்கோவில், ஜூன்.5

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார்பள்ளிகள் விடுமுறைக்கு பின் நேற்று 4ம் தேதி திறந்த தைத் தொடர்ந்து, ஒன்றாம் வகுப்பு மற்றும் பிற வகுப்புகளில் புதிதாக சேர்ந்த மாணவ மாணவியர்களை வரவேற்கும் நிகழ்ச்சி மாவட்டம் முழுவதும் உள்ள அனைத்து பள்ளிகளிலும் நடைபெற்றது.

நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட கோட்டார்பகுதியில் உள்ள கவிமணி அரசு தொடக்கப்பள்ளிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், வருகை தந்து புதிய மாணவர்களை வரவேற்று, மாலை அணிவித்து கௌரவித்து, பாடப்புத்தகம் வழங்கினார். தொடர்ந்து பேசுகையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு முழுவதும் கோடை விடுமுறைக்கு பிறகு நேற்று பள்ளிகள் திறக்கப்பட்டன. நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசுப் பள்ளிகளுக்கு புதிய மாணவமாணவியர்கள் உற்சாகமாக வந்தனர். நம்முடைய பிள்ளைகள் அரசு பள்ளிகளில் பயில்வதால் ஏற்படும் நன்மைகள் குறித்து பெற்றோர்களிடையே கடந்த ஒரு வாரம் கல்வி துறை அதிகாரிகளால் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதன் விளைவாக, இந்த ஆண்டு மட்டும் முதல் வகுப்பில் கூடுதலாக 4 ஆயிரம் மாணவர்கள் சேர்ந்துள்ளனர். வரும் நாட்களில் இன்னும் 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் மாணவர்கள் வரை கூடுதலாக சேருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. 1 முதல் 3ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு புதிய பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டு உள்ளன. இந்த புதிய பாடத்திட்டத்தை மாணவர்கள் மத்தியில் எப்படிக் கொண்டு செல்வது? என்பது குறித்து ஆசிரியர்களுக்கு 3 நாட்களாக சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், மாணவர்களுக்கு தேவையான புத்தக பைகள், காலணிகள் உள்ளிட்ட உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் மாணவர் சேர்க்கை குறைவாக இருப்பதால் மூடப்பட்டுள்ள பள்ளிகளை மீண்டும் திறப்பது குறித்த பட்டியலைப் பெற்று, அவற்றைச் சீரமைத்து நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை அதிகரிக்க பெற்றோர்கள் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆரம்ப கல்வி தான் ஒவ்வொரு குழந்தைகளின் எதிர்காலத்தை தீர்மானிக்கிறது. இவ்வாறு கலெக்டர் பேசினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், மாணவமாணவிகளுக்குப் பாடப்புத்தகங்களை வழங்கி, இனிப்புகளை ஊட்டினார். மேலும் பள்ளி வகுப்பறையில் பொருத்தப்பட்டிருந்த ஸ்மார்ட் போர்டில் முதலாம் வகுப்பு மாணவன் ஒருவனைத் தூக்கி வைத்து, தமிழ் மொழியின் முதல் எழுத்தான 'அ' என்ற எழுத்தை எழுத வைத்தார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரின்ஸ் ஆரோக்கிய ராஜ், மாவட்ட கல்வி அலுவலர் ஜெயராஜ், கவிமணி தேசிக விநாயகம் பள்ளி தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் கமலா மற்றும் பெற்றோர்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



சேலம் மாநகர் பழைய சூரமங்கலம் பெரியார் தெரு அருள்மிகு ஸ்ரீ கண்ணனூர் சமயபுரம் மாரியம்மன் திருக்கோவில் வைகாசி திருவிழா வெகு விமர்ச்சியாக நடைபெற்று வருகிறது. அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இவ்விழாவில் கோவில் நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொடைக்கானல் வட்டம் தாண்டிக்குடி கிராமத்திற்கு உட்பட்ட ஜெ.ஜெ.நகரில் வசித்து வரும் 13 பழங்குடியின மக்களுக்கு விலையில்லா வீட்டு மனை பட்டாக்களை திண்டுக்கல் மாவட்டத்திற்கு புதிதாக பொறுப்பேற்றுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் துர்கா மூர்த்தி, வழங்கினார். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, கொடைக்கானல் வருவாய் கோட்டாட்சியாளர் பிரபு, கொடைக்கானல் வட்டாட்சியர் நந்தகோபால் உடன் இருந்தனர்.

# ஈரோடு தலைமை தபால் நிலையத்தில் ஓய்வூதியம் பெறுவோர் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

ஈரோடு ஜூன் 5

ஈரோடு கோட்ட அளவிலான ஓய்வூதியர் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 24 ந் தேதி காலை 11.00 மணியளவில், ஈரோடு முதுநிலை அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. அதே சமயம், தபால் துறை ஓய்வூதியம் சம்பந்தப்பட்ட தங்கள் குறைகளை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ வருகிற 16 ந் தேதிக்குள் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என்று ஈரோடு முதுநிலை அஞ்சல்கோட்ட கண்காணிப்பாளர் தெரிவித்து உள்ளார்.



# தருமபுரியில் ஸ்ரீ சாய் அன்னதான சேவை சார்பில் மாதந்தோறும் அன்னதானம் வழங்கும் விழா

தருமபுரி ஜூன் 05

தருமபுரி எஸ். வி. ரோட்டில் உள்ள நகர பாரதிய ஜனதா அலுவலகத்தில் ஸ்ரீ சாய் அன்னதான சேவை சார்பில் மாதம் தோறும் முதல் வியாழக்கிழமைகளில் நகர தலைவர் சாய் ஆறுமுகம் தலைமையில் மாபெரும் அன்னதானம் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து அன்னதானத்தை வாங்கி சென்றனர்.

# குமரி. சார்பதிவாளர் அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்பு சோதனையில் சிக்கிய ஆயிரக்கணக்கிலான பணம் பறிமுதல்; வழக்கு பதிவு



நாகர்கோயில் ஜூன் 5,

தமிழகம் முழுவதும் சார்பதிவாளர் அலுவலகங்களில் நேற்று லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை நடத்தினர். அதன்படி கன்னியாகுமரி மாவட்டத்திலும் இடலாக்குடி மற்றும் கொட்டாரம் ஆகிய சார்பதிவாளர் அலுவலகங்களில் நேற்று லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை நடத்தினர். அதில் கொட்டாரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 4300 ரூபாய் கணக்கில் வராத பணம் கைப்பற்றப்பட்டதாகவும் பத்திரப்பதிவு முகவர்கள் மூலம் ரகசியமாக மாலை வீட்டுக்கு செல்லும் வழியில் வைத்து லஞ்சம் பெற்று வருவதால் சார்பதிவாளர் அலுவலகத்தில் நேற்று கூடுதல் பணம் கைப்பற்றப்படவில்லை என்று கூறப்படுகிறது.

மேலும் இடலாக்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் நடந்த சோதனையில் பீரோவில் மூன்று கவர்களில் வைக்கப்பட்டிருந்த 12000, 13,000, மற்றும் 13 ஆயிரத்து நானூறு என மொத்தம் 38 ஆயிரத்து நானூறு ரூபாய் கணக்கில் வராத பணம் கைப்பற்றப்பட்டது. மேலும் இது தொடர்பாக சார்பதிவாளர் மற்றும் அலுவலக ஊழியர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்ற அதிரடி சோதனைகள் குமரி மாவட்டத்தில் இனி தொடர்ந்து அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும்நடத்தப்படும் என்றும்அங்கீகாரமற்ற மனைகள் பதிவு செய்த விவகாரம் தொடர்பாக விரிவான விசாரணை நடத்தவும் லஞ்ச ஒழிப்பு பிரிவு போலீசார் திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இதன் மூலம் அங்கீகாரமற்ற மனைகள்பதிவு விவகாரத்தில் அரசுக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டு உள்ளது என்பதும் அதற்கு லஞ்சம் பெற்ற அதிகாரிகள் யார் யார் என்பதும் அவர்களுடைய சொத்து விவரங்கள் குறித்து தகவல்கள் சேகரிக்கும் பணிகள் ஏற்கனவே நடந்து வருவதாகவும் லஞ்ச ஒழிப்புத்துறை சார்பில் ரகசிய தகவல்கள் கசிந்து உள்ளது. இதன் மூலம் அங்கீகாரமற்ற வீட்டுமனைகளை பதிவு செய்தவர்கள் கலக்கத்தில் உள்ளதாகவும் நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீது நடவடிக்கை பாயும் என்றும் கூறப்படுகிறது. இதன் மூலம் பத்திரப்பதிவு துறையில் சீர்திருத்தங்கள் வரும் நாட்களில் முழு வேகம் பெறும் பல்வேறு அதிகாரிகள் மற்றும் சார் பதிவாளர்கள் பந்தாடப்படுவார்கள் என்ற தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# குமரி பள்ளி மாணவ மாணவிகளுக்கு மாவட்ட கலெக்டர் வாழ்த்து செய்தி

நாகர்கோவில், ஜூன். 5

தமிழகத்தில் புதிய கல்வி ஆண்டுக்கான பள்ளி வகுப்புகள்திறப்பு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதையொட்டி கன்னியாகுமரி மாவட்ட பள்ளி மாணவ மாணவிகளை மாவட்ட ஆட்சி தலைவர் மு பிரதாப் வாழ்த்தினார். அவர் தமது வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:

அன்பிற்கினிய மாணவ மாணவியர்களே புதிய கல்வி யாண்டின் பள்ளி திறப்பு நாளை முன்னிட்டு உங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி என்பது உங்கள் எதிர்காலத்தை வடிவமைக்கும் மிகப்பெரிய சக்தியாகும். புதிய நம்பிக்கைகள், புதிய இலக்குகள் மற்றும் புதிய சாதனைகளுடன் இந்தக் கல்வி யாண்டைத் தொடங்குங்கள். பள்ளிக்குதவறாமல் வருகை தந்து, ஆசிரியர்களின் வழிகாட்டுதலுடன் சிறந்த கல்வி அடைவுகளையும், நல்ல ஒழுக்கத்தையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.

உங்கள் திறமைகளை முழுமையாக வெளிப்படுத்தி, கல்வி, விளையாட்டு மற்றும் கலைத் துறைகளில் சிறந்து விளங்கி, உங்கள் பள்ளிக்கும், பெற்றோருக்கும், சமூகத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

இந்த புதிய கல்வியாண்டு உங்களுக்கு அறிவு, திறன், வெற்றி மற்றும் மகிழ்ச்சியை வழங்கிட எனது இதயப்பூர்வமான நல்வாழ்த்துகள். "இன்றைய மாணவர்கள் நாளைய இந்தியாவின் சிற்பிகள்" என குறிப்பிட்டுள்ளார்.

# குமரி மீனவர்களின் விசைப்படகு மீது மோதிய வெளிநாட்டு கப்பல்

## விழிஞ்ஞம் துறைமுகத்தில் இருந்து விடுவிப்பு

நாகர்கோவில், ஜூன்.5

கன்னியாகுமரி அருகே உள்ள கடற்பகுதியில் கடந்த மார்ச் மாதம் 7ம் தேதி கொல்லத்தை சேர்ந்த செண்ட் ஜோசப் என்ற மீன்பிடி படகு மீது எம். டி சோலீஸ் என்ற வெளிநாட்டு கப்பல் மோதியது.இதில் படகு கடலில் மூழ்கியது. படகில் இருந்த 11 மீனவர்களில் கொல்கத்தாவை சேர்ந்த லவான் தாஸ் (45) அவரது மகன் பாதல் (23) ஆகிய இருவர் கடலில் மாயமானார்கள். மற்ற ஒன்பது மீனவர்கள் காயங்களுடன் மீட்கப்பட்டனர்.

இந்த விபத்தை தொடர்ந்து மார்ச் 9ஆம் தேதி முதல் இக்கப்பல் விழிஞ்ஞம் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. விபத்து தொடர்பான வழக்குகள் மற்றும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்த நிலையில், கப்பல் நிறுவனம் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் இடையே உடன்பாடு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து விழிஞ்ஞம் கப்பல் துறைமுகத்தில் தங்கி இருந்த காலத்திற்கான வாடகை மற்றும் இதர கட்டணங்கள் சுமார் 30 லட்சம் ரூபாயை கேரளா கடல் சார் வாரியத்திற்கு செலுத்தப்பட்டது. இதனை அடுத்து கொச்சி மெர்க்கண்டையில் மரைன் துறையின் முதன்மை அதிகாரி ஜே. செந்தில்குமார் கப்பல் புறப்படுவதற்கான

அதிகார பூர்வ உத்தரவை வழங்கினார். தொடர்ந்து கப்பல் விழிஞ்ஞம் கடற்கரையில் இருந்து புறப்பட்டது. பயணத்திற்கு முன்னதாக கப்பலுக்கு தேவையான எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டன. வியட்நாம் நாட்டை சேர்ந்த கேப்டன் லே வான் துவான் தலைமையில் 20 மாலுமிகள் இக்கப்பலில் உள்ளனர். கப்பல் புறப்பட்ட தகவலை துறைமுக பொறுப்பாளர் எஸ் வினோ லால் மற்றும் உதவி போர்ட் கன்சல்டன்ட் எம்எஸ் அஜீஸ் ஆகியோர் உறுதிப்படுத்தினர். நீண்ட சட்ட போராட்டத்திற்கு பிறகு கப்பல் விடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### தவெக சார்பில்

# ஏழை எளிய மாணவ மாணவிகளுக்கு கல்வி நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா




கோவை ஜூன்:05

கோவை மாவட்டம் வேடப்பட்டி பேரூராட்சி அருகில்தவெக சார்பில் ஏழை எளிய மாணவ மாணவிகளுக்கு கல்வி நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் முதல் மதிப்பெண்கள் எடுத்த மாணவர்களுக்கும் மற்றும் ஏழை மாணவர்களுக்கும் பரிசுகளும் நோட்டுப் புத்தகம்,பேனா கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது.இதில் கோவை புறநகர் வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர் வெள்ளைச்சாமி,வேடப்பட்டி பேரூராட்சி கழக செயலாளர் ஏ பிரகாஷ்,தவெக நிர்வாகிகள் ஆர் மகாராஜன்,வீரமணி வன்னியர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

### சேலம் மாவட்டத்தில் தாட்கோ சார்பில்

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு உணவு ஊட்டச்சத்து இயல் மற்றும் உடல் எடை சீரமைப்பு பயிற்சி

சேலம் மாவட்டத்தில் தாட்கோ சார்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு உணவு ஊட்டச்சத்து இயல் மற்றும் உடல் எடை சீரமைப்பு பயிற்சிகளை தாட்கோ மூலமாக வழங்க உள்ளது.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி துறை மற்றும் மேம்பாட்டு கழகம் (தாட்கோ)மூலமாக ஆதிதிராவிடர்மற்றும் பழங்குடியினஇளைஞர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகளை வழங்கிவருகிறது. இதன் தொடர்ச்சியாக தற்போது தாட்கோ மற்றும் தனியார் நிறுவனம் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு உணவு ஊட்டச்சத்து இயல், உடல் எடை சீரமைப்பு போன்ற பயிற்சிகள் வழங்க உள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற வயது 18 முதல் 35 வரை உள்ள குடும்ப ஆண்டு வருமானம் ரூபாய் மூன்று லட்சத்திற்குள் இருக்க வேண்டும். இந்த தகுதிகளை உடைய இளைஞர்களுக்கான பயிற்சியின் கால அளவு 50 நாட்கள். இந்த பயிற்சிகள் ராணிப்பேட்டை மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற உள்ளது. தகுதி பெறும் நபர்கள் பயிற்சி நடைபெறும் மாவட்டத்தில் தங்கி பயிற்சி பெறுவதற்கான செலவை தமிழக அரசின் தாட்கோ ஏற்றுக் கொள்ளும். இப்பயிற்சியில் தேர்ச்சி பெறும் தகுதியான நபர்கள் பயிற்சி அளிக்கும் நிறுவனத்தின் மூலம் ஆரம்ப மாத ஊதியமாக சுமார் ரூபாய் 15,000 முதல் 20,000 ஆயிரம் வரை வருவாய் ஈட்டும் வகையில் வேலை வாய்ப்பு ஏற்படுத்தி தரப்படும். இந்த பயிற்சியில் சேர்வதற்கு www.thatco.com என்ற தாட்கோவின் இணையதளத்தில் பதிவு செய்து பயன்பெறுமாறு சேலம் மாவட்ட ஆட்சியர் இளம் பகவத் தெரிவித்துள்ளார்.

# கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழா



கோவை ஜூன்:05

கோவை தெற்கு தாலுகா அலுவலகம் அருகே அமைந்துள்ள,கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழாவில் கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி பொங்கலூர் பழனிச்சாமி செந்தமிழ் செல்வன், மாநகராட்சி மேயர்,துணை மேயர்,கோட்டைஅப்பாஸ், தொண்டாமுத்தூர் ரவி, சாந்தி முருகன், லோகு, ராஜீவ்காந்தி, ஆறுகுட்டி அசோக், கதிர்வேல், அன்னம்மாள், எஸ் எம் பி முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கோவை மாநகர் மாவட்ட கழக நிர்வாகிகள்,தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,தலைமை கழக நிர்வாகிகள்,பகுதி மற்றும் வட்ட கழக பொறுப்பாளர்கள்,மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# பள்ளி மாணவர்களுக்கு இடையூறாக கனரக வாகனங்களை இயக்கினால் நடவடிக்கை; எஸ் பி எச்சரிக்கை



நாகர்கோவில், ஜூன்.5

கோடை விடுமுறைக்கு பின் பள்ளிகள் நேற்று திறக்கப்பட்ட நிலையில், பள்ளி செல்லும்அனைத்துமாணவ, மாணவிகளுக்கும் கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். மேலும் அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மாணவர்களின் பாதுகாப்பே முதன்மை என்ற நோக்கில், பள்ளி தொடங்கும் நேரங்களில் சாலைகளில் ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்து அபாயங்களைத் தவிர்க்கும் வகையில், காலை 08.00 மணி முதல் 10.00 மணி வரை அதேபோல் மாலை 03.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை நகர்ப்புற பகுதிகளுக்குள் கனரக வாகனங்கள் நுழைய அனுமதிக்கப்படாது என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட நேரத்தில் கனரக வாகனத்தை இயக்குபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். என கூறியுள்ளார்.



### மு கருணாநிதி பிறந்த நாளையொட்டி

# மனநலம் காப்ப கத்தில் ஆதரவற்றோருக்கு உணவு ஒரத்தநாடு எம்எல்ஏ வைத்தியலிங்கம் வழங்கினர்

தஞ்சாவூர் ஜுன் 5

தஞ்சாவூரில்முன்னாள் முதல் அமைச்சர் மு கருணாநிதி பிறந்த நாளையொட்டி தஞ்சாவூர் வடக்கு வாசலில்உள்ள அன்பகம் மனநல காப்பகத்தில் உள்ள ஆதரவற் றோருக்கு வடை ,பாயசத்துடன் கூடிய அறுசுவை உணவை ஒரத்தநாடு தொகுதி எம்எல்ஏயும், முன்னாள் அமைச்சர் வைத்திலி ங்கம் வழங்கினார் இந்நிகழ்ச்சியில் முரசொலி எம்பி, முன்னாள் சட்டமன்ற பேரவை உறுப்பினர் டி கே ஜி நீலமேகம், ராமச்சந்திரன், மகேஷ் கிருஷ்ணசாமி, மாநகர செயலாளர் சண்.ராமநாதன் மற்றும் ஒன்றிய செயலாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்




### மேகதாதுவில்

# அணைக்கட்ட முயற்சிக்கும் கர்நாடக அரசை கண்டித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர், ஜூன். 5

தஞ்சாவூர் தலைமை தபால் நிலையம் முன்பு தமிழக நலிவுற்ற விவசாயிகள் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற் றது.

இதற்கு தெற்கு மாவட்ட தலைவர் மகேஸ்வரன் தலைமை தாங்கினார். மாநில செய்தி தொடர்பாளர் ஜெய்னுதீன் வரவேற்றார் . இந்த ஆர்ப்பாட்ட த்தை மாநில தலைவர் முகமது இப்ராஹிம் தொடங்கி வைத்து கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார். தொடர்ந்து மாநில பொருளாளர் கிருஷ்ணன், மாநிலத் துணைத் தலைவர் ஜெயக்குமார் ஆகியோர் உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில் காவிரி குறுக்கே மேகதாதுவில் அணைக் கட்ட முயற்சிக்கும் கர்நாடக அரசை கண்டித்து கோஷங்கள் எழுப்பப் பட்டன. மேலும் கூட்டுறவு வங்கியில் விவசாயிகளின் பயிர், நகைக் கடன் அனைத்தையும் தமிழக அரசு தள்ளுபடி செய்ய வேண்டும் , ஜூன் 12ல் மேட்டூர் அணையில் தண்ணீர் திறக்க வேண்டும், தஞ்சாவூர்மாவட்டத்தில் அனைத்து வட்டங்களில் உள்ள பாசன, ஏரி, குளங்கள், வாய்க்கால்களை தூர்வார வேண் டும் , திருவையாறு, பாபநாசம் பகுதியில் வாழை ஆராய்ச்சி நிலையங்கள் உருவாக்க வேண்டு ம், உர விலையை மத்திய அரசு உடனே குறைக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைக ளை வலியுறுத்தியும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இதில் அய்யம்பேட்டை நகர தலைவர் ஜெய்லாலுதீன், அய்யம்பேட்டை நகர செயலாளர் சேக் தாவூத், அரியலூர் ஒன்றிய செயலாளர் தனஞ்செயன் மற்றும் மாநில, மாவட்ட, வட்டார ,ஒன்றிய ,நகர, கிளை நிர்வாகிகள் ஏராள மானோர் கலந்து கொண்டனர். முடிவில் வடக்கு மாவட்ட தலைவர் மாரிமுத்து நன்றி கூறினார்.



### தஞ்சாவூர் மாவட்டத்தில்

# மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை பெற சிறப்பு முகாம்; கலெக்டர் தொடங்கி வைத்தார்

தஞ்சாவூர்ஜூன் 5

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில்18வயதுக்குகீழ்உள்ளமாற்றுத்திறனாளிகளுக்குமாதாந்திரஉதவித்தொகைவழங்குவதற்கான வயது வரம்பினை தளர்த்துவதற்கான சிறப்பு முகாம் நடந்தது

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 18 வயதுக்கு உட்பட்ட மாற்றுத் திற னாளிகளுக்கு வயது தளர்வு செய் து உதவித்தொகை வழங்கிட இணையதளம் வாயிலாக பதிவு செய்யப்பட்ட மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு மருத்துவ பரிசோதனை முகாம் நடந்தது. இதில் 35 பேர் கலந்து கொண்டனர். இவர்களில் தகுதியுடைய 22 மாற்றுத்திறனாளி குழந்தைகளு க்கு உதவி தொகை பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

கூட்டத்தில் சமூக பாதுகாப்பு திட்ட தனி துணை கலெக்டர் சவுமியா மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### குமரியில் முதல் திருமணத்தை மறைத்து

# 2 வது திருமணம் செய்த லண்டனில் வேலை பார்க்கும் வாலிபர்

குளச்சல் ,ஜூன்.5

புதுக்கடைஅருகேஇனயம்புத்தன்துறை பகுதியை சேர்ந்தவர் ஜலஸ்டின் மகன் ஜெர்சின் (33). இவர் லண்டனில் தங்கி இருந்து வேலை செய்து வருகிறார். இந்த நிலையில் கடந்த 2025 ஆம் ஆண்டு ஜெர்சினுக்கும் ராமன்துறை பகுதியைச் சேர்ந்த ஜெரிஷா (24) என்பவருக்கும் திருமணம் நடந்துள்ளது. திருமணத்தின் போது 42 பவுன் நகைகள், ரொக்கம் ரூ 15 லட்சம், மற்றும் வீட்டு உபயோகப் பொருட்கள் வரதட்சணையாக கொடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. திருமணம் முடிந்ததும் ஜெரிஷாவை லண்டன் அழைத்து செல்வதாக கூறி விட்டு, ஏதோ பல காரணங்களை கூறி ஜெர்சின் மட்டும் தனியாக லண்டனுக்கு சென்றுள்ளார்.

இதை அடுத்து சில காலம் மனைவி ஜெரிஷாவுடன் போன் மூலம் பேசி வந்துள்ளார். ஆனால் நாட்கள் செல்ல செல்ல ஜெர்சின் போக்கில் மாற்றம் தெரிய தொடங்கியுள்ளது. அவர் மனைவியுடன் போனில் பேசுவதை தவிர்த்து உள்ளார். ஜெரிஷா மற்றும் அவரது குடும்பத்தினர் யார் போன் செய்தாலும் ஜெர்சின் போன் எடுத்துப் பேசாமல் இருந்துள்ளார்.

இதையடுத்து ஜெரிஷா குடும்பத்தினர் லண்டனில் தங்களுக்கு தெரிந்த நபர்கள் மூலம் விசாரித்துள்ளனர். அப்போதுதான் லண்டனில் ஏற்கனவே திருமணம் ஆகி மனைவி மற்றும் குழந்தைகளுடன் ஜெர்சின் இருப்பது தெரிய வந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த ஜெரிஷா பலமுறை கணவரை தொடர்பு கொள்ள முயன்றும் பேச முடியவில்லை.

தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து ஜெரிஷா குளச்சல் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். ஆனால் புகார் தெரிவித்து பல நாட்கள் கடந்தும் உரிய நடவடிக்கை இல்லாததால், அவர் இது குறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலினிடம் புகார் அளித்தார். புகாரை பெற்றுக் கொண்ட எஸ் பி ஸ்டாலின் இளம்பண்ணை ஏமாற்றி திருமணம் செய்த ஜெர்சின் மீது விசாரித்து நடவடிக்க குளச்சல் மகளிர் போலீசாருக்கு உத்தரவிட்டார். இதை அடுத்து குளச்சல் போலீசார் முதல் திருமணம் நடந்ததை மறைத்து இரண்டாவது திருமணம் செய்து கொண்ட ஜெர்சின் மற்றும் இதற்கு உடந்தையாக இருந்த அவரது தந்தை ஜெலஸ்டின், தாய் மேரி ஹெலன், மற்றும் குடும்பத்தினர் ஜெஸ்லி, வனிதா என்ற பிரமி (41), லெனின் (46), டெல்லிஸ் மேரி (65) என 7 பேர் மீது வழக்கு பதிவு செய்தனர் இந்த வழக்கு மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### கன்னியாகுமரியில் கோடை சீசன் நிறைவு

# 5 லட்சத்து 86 ஆயிரம் சுற்றுலா பயணிகள் விவேகானந்தர் நினைவு மண்டபம் மற்றும் திருவள்ளுவர் சிலையை பார்வையிட்டனர்

கன்னியாகுமரி, ஜூன்.5

பிரசித்தி பெற்ற சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கிறார்கள். கன்னியாகுமரிக்கு சுற்றுலா வரும் பயணிகள் காலையில் சூரியன் உதயமாகும் காட்சியை கண்டு ரசித்த பின்னர், முக்கடல் சங்கமத்தில் நீராடி பகவதி அம்மனை தரிசனம் செய்துவிட்டு,

அடுத்த படியாக கடலின் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு பாறை மற்றும் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை கடலின் நடுவே அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி இழை கூண்டு பாலம் வழியாக நடந்து சென்று பார்வையிடுவார்கள். இதற்காக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் சார்பில் படகுகள் இயக்கப்பட்டு வருகிறது. படகு போக்குவரத்து சாதாரண நாட்களில் தினமும் காலை 8 மணிக்கு தொடங்கி மாலை 4 மணி வரை தொடர்ச்சியாக நடைபெறும். சீசன் நேரங்களில் காலை 7 மணிக்கு படகு சேவை தொடங்கி நடைபெறும்.

தற்போது கோடை சீசன் இன்றுடன் நிறைவு பெறுகிறது.

இந்த கோடை விடுமுறை கடந்த ஏப்ரல் மாதம் தொடங்கியது. கோடை விடுமுறை சீசனை முன்னிட்டு கடந்த ஏப்ரல் மாதம் 2 லட்சத்து 25 ஆயிரத்து 55 பயணிகளும்,மே மாதம் 3 லட்சத்து 60 ஆயிரத்து 964 சுற்றுலா பயணிகள் என 2 மாதங்களில் 5 லட்சத்து 86 ஆயிரத்து 19 சுற்றுலா பயணிகள் படகில் பயணம் செய்து விவேகானந்தர் நினைவு மண்டபம் மற்றும் திருவள்ளுவர் சிலையை கண்டு ரசித்துள்ளனர். இதனை பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

### கிருஷ்ணகிரி அருகே

# கொலை வெறி தாக்குதல் நடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் பாதிக்கப்பட்டவர்கள் மீது வழக்கு பதிவு செய்த காவல் துறையினர்கள் மீது நடவடிக்கை பாயுமா



கிருஷ்ணகிரி, ஜூன் 5

கிருஷ்ணகிரி மாவட்டம் நாகரசம்பட்டி அருகே உள்ள காவாப்பட்டியை சேர்ந்தவர் விவசாயி கிருஷ்ணமூர்த்தி இவருக்கும் அதே ஊரை சேர்ந்த சகஸ்ரநாமம் என்பருக்கும் நிலத்தகறாறு கடந்த பல ஆண்டுகளாக இருந்து வந்துள்ளது.

இந்த நிலையில் கிருஷ்ணமூர்த்தியின் நிலத்தில் சாகுபடி செய்யப்பட்டு இருந்த நெல் அறுவடை செய்யும் பணியில் சகஸ்ரநாமத்தின் தரப்பை சேர்ந்தவர்கள் அத்துமீறி ஈடுப்பட்டு வருவதாகவந்த தகவலை அடுத்து கிருஷ்ணமூர்த்தி சம்பவ இடத்திற்கு சென்று தடுத்துள்ளார்.

அப்போது அங்கு இருந்த கோவிந்தசாமி, ஜெயகுமார், மாரியப்பன், வெங்கடேசன், ஜெகநாதன் ஜெகதீஷ்வரி ஆகியோர் அங்கு இருந்த கம்பி மற்றும் மரக்கட்டையை கொண்டு கிருஷ்ணமூர்த்தியை கை, கால் போன்ற இடங்களில் கொலை வெறி தாக்குதல் நடத்தி உள்ளதாக கூறப்படுகிறது. இந்த கொலை வெறி தாக்குதலில் சுய நினைவு இழந்து உயிருக்கு போராடிய கிருஷ்ணமூர்த்தியை அப்பகுதியில் உள்ளவர்கள் மீட்டு அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

பின்னர் இது தொடர்பாக நாசரம் பட்டி காவல் நிலையத்தில் கிருஷ்ணமூர்த்தியின் மனைவி ஆனந்தலட்சுமி கொலை வெறிதாக்குதல் நடத்தியவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு புகார் மனு கொடுத்து உள்ளனர்.

ஆனால் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் எந்த சம்மந்தமும் இல்லாத ஆனந்தலட்சுமி அவரது மகள் சன்மதி, மருகன் சிலப்பரசு ஆகியோர் மீது பெய்யான வழக்கு பதிவு செய்து காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து உள்ளதால் பெரும் மன உழச்சலுக்கு ஆளாகி உள்ள கிருஷ்ணமூர்த்தி அவரது மனைவி ஆனந்த லட்சுமி, அவரது மகள் சன்மதி ஆகிய மூன்று பேரும் இன்று கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கத்துரையை சந்தித்து புகார் மனுவினைக் கொடுத்தனர்.

மேலும் இது குறித்து பேசிய கிருஷ்ணமூர்த்தி நிலம் தொடர்பாக கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக சகஸ்ரநாமம் என்பருடன் பிரச்சனை இருந்து வந்தது,

இந்த நிலையில் கடந்த சில நாள்களுக்கு முன்பு தனக்கு சொந்தமான நிலத்தில் சாகுபடி செய்து இருந்த நெல் அறுவடை செய்யும் பணியில் சகஸ்ரநாமத்தின் அடியாள்கள் ஈடுபட்டு வந்தனர்.

இதனை தடுக்கும் பேது அவர்கள் இருப்பு கம்பியால் கொலைவெறி தாக்குதல் நடத்தியதோடு வீட்டையும் அடித்து உடைத்துவிட்டனர்.

இது குறித்து நாகரசம்பட்டி காவல் நிலைத்தில் கோவிந்தசாமி, ஜெயகுமார், மாரியப்பன், வெங்கடேசன், ஜெகநாதன் ஜெகதீஷ்வரி ஆகியோர் மீது புகார் கொடுத்தால் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் எனது மனைவி, மகள் , மருமகன் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து காவல் துறையினர் நடு நிலையோடு செயல்படாமல் அவர்களுக்கு சாதகமாக செயல்பட்டு வருகின்றனர்,

இதனால் மன உழைச்சல் ஏற்பட்டதால் இன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் முறையான நீதி விசாரனை நடத்தக்கோரியும் எங்களின் உயிருக்கு பாதுகாப்பு கேட்டு மனு கொடுத்துள்ளதாக வேதனையுடன் கிருஷ்ண மூர்த்தி தெரிவித்தார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.